**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.152/2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : Manivannan |
| Father/Husband's Name | : Balasundram |
| Village | : |
| Taluk | : |
| Calling | : Forester, Chengalpattu |
| Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06.05.2026.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செங்கல்பட்டு சரகம் வனவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 01.06.2022 ம் தேதி முதல் செங்கல்பட்டு வனசரகத்தில் வனவராக பணிசெய்து வருகிறேன். 04.07.2023 ம் தேதி முதல் ஆப்பூர் பிரிவு வனவராக கூடுதல் பொறுப்பாக இருந்த போது 10.07.2023 ம் தேதி காலை சுமார் 8 மணிக்கு நானும் சிங்கப்பெருமாள் கோவில் வனக்காப்பாளர் திருமதி. சித்ரா கன்னியப்பன், பரனூர் வனக்காப்பாளர் திரு.குமார், சிங்கப்பெருமாள் கோவில் வனக்காவலர் திரு.கண்ணன் ஆகியோருடன் செங்கல்பட்டு வனசரகம் ஆப்பூர் பிரிவுக்கு உட்பட்ட அஞ்சூர் காப்புக்காட்டினுள் எல்லை கற்கள் 46 மற்றும் 47 க்கு இடையே உள்ள வனப்பகுதியினை தணிக்கை செய்யும் போது பழைய ஸ்ரீவீர

ஆஞ்சநேயர் கோவிலை புதுப்பிக்கும் வகையில் கட்டிடம் கட்டப்பட்டிருந்தது. இது சம்மந்தமாக விசாரணை செய்ததில் கோவில் பூசாரியாக இருந்த பார்த்தசாரதி த/பெ.எத்திராஜ், சுமார் வயது 41, விலாசம் 90/1 அனுமந்தபுரம் கிராமம், தர்காஸ், திருப்போரூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம் என்பவர் தான் பொதுமக்களிடம் நன்கொடை வசூல் செய்து கோயில் புனரமைக்கும் பணிக்காக மணல், ஜல்லி, செங்கல், கம்பி போன்ற பொருட்களை அத்துமீறி காப்பு காட்டினுள் எடுத்து சென்று பக்க சுவர் கட்டுதல், படிக்கட்டு கட்டுதல் போன்ற புனரமைப்பு பணிகளை செய்து கொண்டிருந்தது தெரியவந்தது.

2. இது சம்மந்தமாக வனத்துறையினர் அங்கு வருவதைக் கண்டு தலைமறைவு ஆகிவிட்டார். அஞ்சூர் காட்டு பகுதி அடர்ந்த வனப்பகுதியாகவும், அங்கு மத்திய பாதுகாப்பு படை CRPF துப்பாக்கி சுடும் பயிற்சி மையமாகவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சம்பவ இடத்தில் இருந்து பிளாஸ்டிக் பாண்ட 2, பிளாஸ்டிக் டிரம் 2, மண்வெட்டி 1 ஆகிய பொருட்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் எச் நமனா எண் 0078322, நாள் 10.07.2023 தயார் செய்தேன். இது **அதசா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிடி பொருட்களை வனசரக அலுவலகத்திற்கு கொண்டு வந்து செங்கல்பட்டு வனசரக பழையின வழக்கு எண் 83/2023 நாள் 10.07.2023 வழக்காக பதிவு செய்யப்பட்டு எதிரியின் மீது 1980 வனப்பாதுகாப்பு சட்டத்தின் படி அனுமதி பெறாமல் பழைய கோவிலை புதுப்பித்தது, 1882 தமிழ்நாடு வனச்சட்டம் V Act பிரிவு 21 (a)(d)(e)

மற்றும் (g)ன் படி குற்ற செயலாகும். பிரிவு 21 (2) ன் படி தண்டனைக்குறிய குற்றமாகும். மேலும் நீதிமன்ற நடவடிக்கைகாக பிடிப்புக்களை form 95 ல் பதிவு செய்து மாண்புமிகு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண் 2 ல் தப்பி ஓடிய குற்றவாளியை தேடிவருவதாகவும் கைது செய்ய வேண்டியும் பிடியாணை வேண்டப்பட்டு நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படுகிறது. பிடிப்பொருட்களை நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு PI No.198/2024 date:08.07.2024 சான்றிதழ் பெறப்பட்டது. அந்த படிவம் 95 **அதசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட பொருட்களான பிளாஸ்டிக் பாண்ட 2, பிளாஸ்டிக் டிரம் 2, மண்வெட்டி 1 **சா.பொ.1 ( 5 வரிசைகள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் விசாரணை முடித்து படிவம் A எதிரி மீது தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu